034

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் - 2006
இறுதிப் பரீட்சை 2006 - மட்டம் 06
LWU 3323/4314/4323 – தொழிற் சட்டம்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 26.04.2006 நேரம்: பி.ப 1.30 - பி.ப 4.30

5 வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. "பொதுச்சட்ட எஜமான் வேலையாள் உறவு முறை நியதிச்சட்ட உறவு முறை ஒன்றிற்கு நிலைமாற்றமடைந்துள்ளது"

மேற் போந்த கூற்றுடன் நீர் உடன்படுகறீரா? உமது விடைக்குரிய காரணங்களை தருக.

2. ரோய் அன்ட் கம்பனி ஒரு வாடகை வண்டி சேவையை நடத்திவருகிறது. அது வருண என்பவரை வாடகை வண்டி ஓட்டுணர்களுள் ஒருவராக வேலையில் அமர்த்தியுள்ளது. வருணவுக்கு கிரம முறையாக மாதாந்த சம்பளம் செலுத்தப்படுவதில்லை. ஆனால், ஒரு நாளில் பெறப்படுகின்ற மொத்த வருமானத்தில் பெறப்படும் இலாபத்தில் இருந்து 1/3 பங்கு அவனுக்கு செலுத்தப்படுகிறது. கம்பனியுடைய சீருடை விதிகளுக்கு அமைய வேலை நேரங்களில் வருண சட்டை, கழுத்துப்பட்டி என்பவற்றை அணிந்தான்.

வருணவுக்கும் கம்பனிக்கும் இடையிலான ஒப்பந்தத்திலே, வருண வேறு எந்த இடத்திலும் எந்த தகைமையிலும் வேலை செய்வதில் இருந்து வெளிப்படையாக தடுக்கப்பட்டுள்ளான். மேலும், கம்பனியின் சேவையில் இருந்து விலகி அல்லது கம்பனியியால் அவனுடைய ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டதிலிருந்து மூன்று வருடங்களுக்கு வருண வேறு எந்த நிறுவனத்திலும் வாடகை வண்டி ஓட்டுநராக வேலை செய்ய முடியாது எனவும் அவ்வுடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் கடைசி வாசகம், வருண சேவைக்கான ஒப்பந்தம் ஒன்றின் கீழ் சுதந்திர ஒப்பந்தக் காரர் என குறிப்பிட்டிருந்தது.

ரோய் என்ட கம்பனி வருணவுடைய ஒப்பந்தத்தை முடிவுறுத்த விரும்புகிறது. வருண சேவை ஒப்பந்தம் ஒன்றின் கீழ் வேலையாள் ஒருவரா என்பதை ஆராய்க.

3. (அ) கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் கீழ் கைத்தொழில் பிணக்குகளை சமரசம் செய்வது தொடர்பில் அமைச்சருக்கு இருக்கும் அதிகாரங்களை விளக்குக.

(ஆ) 'X' அன்ட் கம்பனி 2005ம் ஆண்டு ஜனவரி 1ம் திகதியில் இருந்து செயற்பாட்டுக்கு வரும்வரையில் அணில் என்பவனை இலிகிதர் ஒருவராக வேலையில் அமர்த்தியது. கம்பனி அணிலுக்கு நியமனம் கடிதம் ஒன்றை வழங்கவில்லை. அவருக்கு மாதாந்த சம்பளம் ஒன்றாக ரூ 10,000/= செலுத்தப்பட்டது. கம்பனியில் வேலை செய்த பெண் இலிகிதர் ஒருவரை தொந்தரவு செய்ததன் காரணமாக அணிலுடைய சேவை2006 மார்ச் 18ம் திகதி முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இவ் வேலை முடிவுறுத்தும் தீய எண்ணத்துடன் செய்யப்பட்டது என அணில் முறையிடுகிறான்.

அனிலுடைய சேவை முடிவுறுத்தல் தொடர்பாக அவன் ஏதேனும் நிவாரணம் பெற உரித்துடையவனா? என்பது தொடர்பில் அவனுக்கு ஆலோசனை வழங்குக.

4 தொழில் சட்டத்தில் "நியாயமானதும் ஒப்புரவானதும்" என்ற எண்ணக்கருவை, கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின் ஏற்பாடுகளுடனும், தீர்க்கப்பட்ட வழக்குகளுடனும் தொடர்புறுத்தி விளக்குக.

5. "இலங்கையில் பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு உரிய ஒவ்வொரு முயற்சியையும் சட்டவாக்கம் மேற்கொண்டுள்ளது".

இலங்கையில் தொழில் சட்டங்களுடன் தொடர்புறுத்தி மேற்போந்த கூற்றின் மீது கருத்துரை செய்க.

6. "வேலை நிறுத்தம் செய்வதற்கான உரிமை முழுமையான உரிமை ஒன்றல்ல".

பொருத்தமான சட்டவாக்க ஏற்பாடுகளுடன் தொடர்புறுத்தி மேற்போந்த கூற்றை விமரிசித்து விளக்குக.

7. (அ) பொருத்தமான நியதிச்சட்ட ஏற்பாடுகளுடன் தொடர்புறுத்தி இலங்கையின் பணிக்கொடை வழங்கல் தொடர்பான சட்டத்தை விளக்குக.

(ஆ) நிமால் அன்ட் கம்பனி 1995ம் ஆண்டு தனது வியாபாரத்தை ஆரம்பத்திலிருந்து 15 வேலையாட்களை வேலையில் அமர்த்தியிருந்தது. மனோஜ் கடந்த 6 வருடங்களாக இக்கம்பனியில் வேலை செய்து வருகிறான். அவன் தற்போது கம்பனியை விட்டு வெளியேற தீர்மானித்தான்.

(i) நிமலுக்குரிய பணிக்கொடை உரித்து தொடர்பில் அவனுக்கு ஆலோசனை வழங்குக.

(ii) அவனுடைய சேவை, கையாடல் குற்றத்திற்காக, கம்பனியால் முடிவுறத்தப்பட்டிருந்தால் உமது விடை வேறுபடுமா? உமது விடைக்குரிய காரணங்களை தருக.

8. பின்வருவனவற்றில் ஏதேனும் இரண்டினை பற்றி குறிப்பெழுதுக.

(அ) ஆட்குறைப்பு தொடர்பான சட்டம்
(ஆ) கூட்டு உடன்படிக்கைகள் தொடர்பான சட்டம்
(இ) தகுதிகாண் வேலையாள் ஒருவரின் தொழில் பாதுகாப்பு
(ஈ) கடை, காரியால ஊழியர்கள் சட்டத்தின் முக்கியமான அம்சங்கள்.

(பதிப்புரிமையுடையது)